IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, (FTC) ERANIEL

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 278/2019 P.W. 4 /L.W.4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. ராணி | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. திரவியம் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 13.11.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். தற்சமயம் வேலை எதுவும் செய்யவில்லை. அ.சா1ற்கு நான் மாமி முறை. அ.சா1ற்கும், குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் திருமணத்தின் போது நகை, பணம் மற்றும் சீர்வரிசை பொருட்கள் கொடுத்தார்கள். அ.சா1ற்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் அதன் பிறகு பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இது சம்மந்தமாக எனது கணவர் திரவியம் என்பவர் இருவருக்கும் சமரசம் பேசி னார். மறுபடியும் அவர்களுக்குள் பிரச்சினை ஏற்பட்டது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

எனது ஊர் இரணியல். காரங்காட்டிற்கும் இரணியலுக்கும் இடையே எத்தனை கி.மீ இருக்கும் என்றால் 4 கி.மீட்டருக்குள் தான் இருக்கும். நான் அ.சா1ன் அத்தை என்றால் சரிதான். திருமணத்தின் போது நடந்த சம்பவங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் அ.சா1ன் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, (FTC) ERANIEL**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 278/2019 P.W. 5 /L.W.5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. கண்ணன் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. திரவியம் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 13.11.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தமிழ்நாடு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். அ.சா1 என்னுடைய உறவினர். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். 2006ம் வருடம் அ.சா1ற்கும், குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் நிச்சயம் நடந்த போது ரூபாய் 1,00,000 குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு வரதட்சணையாக கொடுத்தார்கள். திருமணத்தின் போது 50பவுன் நகை போடுவதாக பேசினார்கள். சீர்வரிசைகளும் கொடுப்பதாக பேசினார்கள்.

2. திருமணத்தின் போது 50 பவுன் நகை மற்றும் சீர்வரிசைக் கொடுத்து அ.சா1 ஐ குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு திருமணம் செய்துக்கொடுத்தார்கள். திருமணத்திற்கு பிறகு சிறிது நாட்கள் கழித்து அவர்கள் இருவருக்கும் பிரச்சினை ஏற்பட்டது. அதன்பிறகு எங்கள் வீட்டிற்கு தகவல் வந்தது. நானும் எனது தந்தையும் சென்று சமாதானம் பேசினோம். இவ்வாறு 2, 3 தடவை நாங்கள் சமாதானம் பேசினோம்.

3. குற்றம் சுமத்தப்பட்ட நபர் வேலை செய்யும் இடத்திற்குச் சென்று நான் அ.சா1ற்கும் அவருக்கும் இருந்த சண்டை குறித்து சமாதானம் பேசினேன். அதன் பிறகு அவர்கள் இருவருக்கும் பிரச்சினை ஏற்பட்டு இரண்டு பேரும் பிரிந்துவிட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

நான் அ.சா1ன் மைத்துனர் என்றால் சரிதான். திருமணத்தின் போது நடந்த சம்பவங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் அ.சா1ன் உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, (FTC) ERANIEL</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 278/2019 P.W. 6 /L.W.7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ஜோஸ் கிறிஸ்டோபர் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. அற்புதம் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 13.11.2024.**

**<u>அரசுத்தரப்பு முதல் விசாரணை</u> :**

**<u>குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்</u>**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் சிவில் இஞ்சீனியராக பணிச் செய்து வருகிறேன். அ.சா1ஐ எனக்குத் தெரியும். அ.சா1ற்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் 14.07.2006ம் வருடம் திருமணம் நடந்தது. திருமணத்தின் போது 50பவுன் நகை மற்றும் 1,00,000 பணம் மற்றும் சீர்வரிசைகள் கொடுத்தார்கள். சிறிது நாட்களில் அ.சா1ற்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் பிரச்சினை ஏற்பட்டது.

2. டியூசன் செண்டர் கட்டுவதற்காக பணம் வேண்டுமென்று குற்றம் சுமத்தப்பட்ட நபர் விரட்டிவிட்டதாக கேள்விபட்டேன். அ.சா1ன் தாயார் 25,000 பணம் இது சம்மந்தமாக கொடுத்ததாகவும் கூறியதின் பேரில் எனக்குத் தெரியும். அ.சா1ற்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் அதன் பிறகு பிரச்சினை ஏற்பட்டு பிரிந்துவிட்டார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

நான் அ.சா1ன் உறவினர் இல்லை, ஊர்காரர். சிறுவயதிலிருந்தே தெரியும். வழக்கு சம்பவங்கள் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அவர்கள் அண்ணன், அப்பா, அம்மா சொல்லி தான் தெரியும். நான் அ.சா1ன் ஊர்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, (FTC) ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 278/2019 P.W. 7 /L.W.8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. ஜெய்சன் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. வியாகுலமுத்து | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 13.11.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். ஓட்டுனராக பணிச்செய்து வருகிறேன். அ.சா1ஐ எனக்குத் தெரியும். அ.சா1ற்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் 14.07.2006ம் வருடம் திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பிறகு அ.சா1ற்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் பிரச்சினைஏற்பட்டு அ.சா1 அவரது வீட்டிற்கு வந்துவிட்டார். இது சம்மந்தமாக அ.சா1ன் தந்தை என்னிடம் கூறி வருத்தப்பட்டார். திருமணத்தின்போது 50பவுன் நகை, 1,00,000 ரொக்கம் மற்றும் சீர்வரிசைகள் கொடுத்ததாகவும் கூறினார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

இல்லை

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.